**கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டம் - 2016**

கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவச் செயற்திட்டத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட 2009 திசெம்பர் 18 ஆந் திகதிய 2557 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பட்டோலை 5 இன் 27 ஆம் பிரிவு மற்றும் 2558 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பட்டோலை 5 இன் 27 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னைய உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் கொழும்பு மாநகர சபை மற்றும் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை என்பன அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. முன்னேற்றப்பட்ட கடற்கரையோர மற்றும் நாடாளவிய நீர் தரத்தின் விளைவாக தூய்மை மற்றும் சுகாதார நிலைமையை முன்னேற்றுவதனூடாக கொழும்பு பெரும்பாகத்திலுள்ள 1.5 மில்லியன் நகர மற்றும் புறநகர் குடியிருப்பாளர்களிற்கான நகர அபிவிருத்தி மற்றும் பொதுச் சுகாதாரத்தை முன்னேற்றுவது செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 14,657.10 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 109.12 மில்லியன் ஆக உள்ளதுடன் அதில் ரூபா 12,629.10 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 94.37 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி இணங்கியிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 ஏப்ரல் 09 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் முடிவுறுத்துவதற்கு பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் காலப்பகுதியானது 2017 ஜுன் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக்

கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், போன்றவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை நிதியிடல் அறிக்கை நியமங்களினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் கட்டுப்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும், ஆகும்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1. அபிப்பிராயம்**

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்கு கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளுக்கு அமைவாக மீளளிப்புக்கான விண்ணப்பங்களிற்கு ஆதாரமாக அமைந்திருந்தன என நம்பகரமாக திருப்திப்பட முடியும் என்றும்,

(உ) எனது முன்னைய கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கு முகாமைத்துவத்தினால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2016 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் 2016 ஆம் ஆண்டின் போது | | பயன்படுத்திய நிதிகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடீபீ | 94.37 | 12,629.10 | 942.00 | 5.02 | 748.15 | 48.38 | 5,626.75 |
| ஜீஓஎஸ்எல் | 14.75 | 2,028.00 | 98.71 | 0.64 | 95.57 | 5.53 | 805.10 |
| | 109.12 | 14,657.10 | 1,040.71 | 5.66 | 843.72 | 53.91 | 6,431.85 |

மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தினுடைய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 6 ½ வருடங்கள் கடந்திருந்தும் கூட, 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 14,657.10 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 109.12 மில்லியன் இல், 49.40 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 6,431.85 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 53.91 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, செயற்திட்டத்திற்கான விரிவான அமுல்படுத்தல் திட்டம் இல்லாமையினால், செயற்திட்டத்தினுடைய எஞ்சிய 06 மாதகாலங்களுக்குள் செயற்பாடுகளுக்காக முழுமையான ஒதுக்கீடுகளினை பயன்படுத்துவது மிகவும் சாத்தியமற்றதாகக் காணப்பட்டது.

### 3.2 பௌதீக செயன்முன்னேற்றம்

கொழும்பு பெரும்பாக பகுதியில் நாடளாவிய நீரின் தூய்மை மற்றும் சுகாதார நிலமையை முன்னேற்றும் நோக்கத்திற்காக, கழிவகற்றல் உட்கட்டமைப்பினை மேம்படுத்தல், உட்கட்டமைப்பு அபிவிருத்தியை வலுப்படுத்தல் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் அமுல்படுத்தல் உதவிகள் என்ற 03 கூறுகளின் கீழ் செயற்திட்டத்தினுடைய நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது. கழிவகற்றல் உட்கட்டமைப்பினை மேம்படுத்தல் கூறின் கீழ் சாக்கடை சுத்தப்படுத்தும் உபகரணம் மற்றும் செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு உபகரணங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முடிவடைந்திருந்த போதிலும், நிலக்கீழ் சாக்கடையின் புனரமைப்பின் கீழான வேலைகளின் பௌதீக முன்னேற்றம் 65 சதவீதத்திலும் குறைவான நிலையில் காணப்பட்டது. மேலும், உட்கட்டமைப்பு அபிவிருத்தியை வலுபடுத்தல் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் அமுல்படுத்தல் உதவிகளை பலப்படுத்தலின் கூறுகளின் கீழான நடவடிக்கைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பகுதியளவில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 19 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென ரூபா 4,023 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்ட கொழும்பு மாநகரப் பகுதியிலுள்ள நிலக்கீழ் சாக்கடையினை புனரமைப்பதற்கான சாக்கடை இணைப்புக்களின் 10 கிலோமீற்றர்களின் புனரமைப்பு மற்றும் சாக்கடை இணைப்புக்களின் 125 கிலோமீற்றர்களின் நிபந்தனை மதிப்பீடு போன்றவற்றிற்கான ஒப்பந்த வேலைகளின் மந்தமான திட்டமிடல் மற்றும் ஒப்பந்தகாரரால் பௌதீக வளங்கள் போதியளவில் வேலைக்கமர்த்தாமை மற்றும் செயற்திட்டத்தின் அக்கறையுடைய தரப்பினர் மந்தமான தொடர்பாடலால் அத்திகதியிலுள்ளவாறு 48 சதவீத மந்தமான செயன்முன்னேற்றத்தை காட்டுகின்றது.

(ஆ) 2016 பெப்ரவரி 29 இல் பூர்த்தியாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட வனத்தமுள்ள புவியிர்ப்பு சாக்கடை வலையமைப்பினை மேம்படுத்துவதற்குரிய ஒப்பந்தம் ரூபா 290 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்டதுடன் உரிய ஒப்பந்தக்காரர்களின் தோல்வியின் காரணமாக இடைநடுவில் கைவிடப்பட்டது. ஆரம்ப கட்டங்களில் முறையான நில அளவைகள் இல்லாமல் குளிதோண்டல் மேற்கொண்டமையால் 22 தனியார் இருப்பிடங்கள் மற்றும் முன்னரிடப்பட்ட கழிவகற்றல் இணைப்புக்களுக்கு பாதிப்புக்கள் ஏற்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(இ) கழிவுநீர் இறைக்கும் நிலையங்களின் வடிவமைப்பு, நிர்மாணம் மற்றும் புனர்நிர்மாணம் தொடர்பாக வழங்கப்பட்ட ஒப்பந்தங்களை ஒப்பந்தக்காரர்களினைக் தெரிவு செய்வதற்கு குறிப்பிடத்தக்களவு காலதாமதம் ஏற்பட்டமை கட்டமைப்பு வடிவமைப்புக்கள் மற்றும் அணைச்சுவர் மீது ஒப்பந்ததாரர்களுக்கு குறைவான அறிவுறுத்தல்களில்லாமை வேலைத்தளத்தின் ஆரம்ப சுத்தம் மற்றும் கழிவுநீரினுடைய குறுக்குப்பாய்ச்சல் என்பவற்றின் மீது ஏற்பட்ட வழமையான மாற்றங்கள் போன்றவற்கான போதுமானளவு தாமதத்தை அறிக்கையிட்டிருந்தது. மேலும், நகர திட்டமிடல் மற்றும் கொழும்பு நகரத்தினுடைய நகரத்திட்டமிடல் அபிவிருத்திகளின் அண்மைய மாற்றங்களால் கழிவுநீர் அகற்றல் முறைமையினுடைய மூல வடிவமைப்புக்களில் மாற்றஞ் செய்வதற்கு நேரிட்டது.

(ஈ) கொழும்பு மாநகர பகுதியிலுள்ள சூழல் மாசடைவுக்கான மூலங்களினை இனங்காண்பதற்கும் மற்றும் சூழலை மாசுபண்ணும் தரப்பினர் தொடர்பான பொறுப்புக்களினை முன்மொழிவதற்கும் செயற்திட்டமானது முறையாக கவனத்தை செலுத்தியிருக்கவில்லை. பாடசாலை மாணவர்கள், குடிசையில் வசிக்கும் குடியிருப்பாளர்கள், மற்றும் ஏனையோர்க்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் கருத்திற்கொள்ளப்பட்டு நடாத்தப்பட்டிருந்தும் கூட, வெளிப்பிரதேசங்களிலிருந்து கொழும்பு நகருக்குள் வருகைதரும் நபர்களுக்கு குப்பைகள் முகாமைத்துவம் தொடர்பாக கற்பிப்பதற்கு அவர்களை ஒரு தரப்பினர்களாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

-----------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பந்தி 3.2(ஆ) யில் குறிப்பிட்டதற்கிணங்க, தனியார் இருப்பிடங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட தேசம் மற்றும் ஒப்பந்ததாரரினால் பின்பற்றப்பட்ட பாதுகாப்பான நடைமுறைகளின்மை காரணமாக வனத்தமுள்ள நிலக்கீழ் சாக்கடை வலையமைப்பினை மேம்படுத்தல் செயற்திட்டமானது கைவிடப்பட்டது. மேலும், அதற்காக ரூபா 1.05 மில்லியன் தொகை ஒப்பந்தக்காரர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தும் கூட, நகரத்தில் காணப்படுகின்ற சமூகங்களுக்கு ஏற்படுத்தப்பட்ட நட்டத்தினை ஈடுசெய்வதற்காக ஒப்பந்ததாரரினால் விரிவான அடிப்படையில் காப்புறுதி பாதுகாப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், 10 கிலோ மீற்றர் சாக்கடை குழாய்களின் புனர்நிர்மாணம் மற்றும் 125 கிலோ மீற்றர்கள் சாக்கடை இணைப்புக்களின் நிலவர மதிப்பீடு என்பவற்றின் கீழ் வழங்கப்பட்ட கொழும்பு சாக்கடை முறைமை கிருலப்பனை மற்றும் நாரஹன்பிட்டியவின் வடக்கு நீர்ப்பகுதியில் கழிவுநீர் குழாய்களின் இடுவதற்கான ஒப்பந்தத்தின் பகுதி உரிய பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட அண்மைய அபிவிருத்தி வேலைகளின் காரணமாக தவிர்க்கப்பட்டது. ஆகையால், குழாய்களினை இடும் வேலைகளில் 36 சதவீதம் குறைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இதன் மீது தீர்மானமெடுக்கும் முன்னர் ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப முற்பணங்களின் அறவீடு மற்றும் வேலைப் பழுவினை

குறைத்தலினால் ஒப்பந்த காலத்தினை குறைத்தமை என்பன கருத்திற்கொள்ளப்படவில்லை.

(இ) செயற்திட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட 06 உறுப்பினர்கள் உள்ளடக்கிய கொள்கை குழு செயற்திட்டத்தினுடைய செயற்பாடுகளினை உரிய நேரத்தில் பூர்த்தி செய்வதற்கு போதுமான அளவு பங்களித்திருக்கவில்லை. கொள்கைக் குழுவினுடைய உறுப்பினர்களின் மாதாந்தக் கூட்டம் மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருக்காததுடன் மற்றும் திட்டத்தினுடைய நடவடிக்கைகள் பூர்த்திசெய்வதற்குரிய எதிர்ப்புக்கள் இனங்காணப்படாமை அவதானிக்கப்பட்டதுடன் மற்றும் திசைமாற்றும் குழுவிற்காக பங்குபற்றுதலினூடாக செயற்திட்டத்துடன் தொடர்புகொள்ளப்பட்டிருக்க வில்லை. எவ்வாறாயினும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொள்கைக் குழுவினுடைய உறுப்பினர்களுக்கு ரூபா 19.71 மில்லியன் தொகை படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

முக்கிய முகாமைத்துவ பதவிகளுக்குரிய அலுவலக உறுப்பினர்களின் பற்றாக்குறையுடன் செயற்திட்டத்தினுடைய செயற்பாடுகள் தொடரப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் மற்றும் திட்டத்தினால் அமுல்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் பௌதீக செயன்முன்னேற்றம் தொடர்ந்தும் மந்தத்தை விளைவித்திருந்தது. மேலதிக திட்ட பணிப்பாளர் பதவியும், 04 செயற்திட்ட பொறியியலாளர் பதவிகளும் மற்றும் நிதி முகாமையாளரொருவர் பதவியும் ஆண்டுமுழுவதும் தொடர்ச்சியாக வெற்றிடமாகக் காணப்பட்டது.